**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
[https://www.evastaliniasacademy.in/](https://www.evastaliniasacademy.in/)
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# சாகித்திய அகாதெமியின் யுவ புரஸ்கார், பால சாகித்திய விருதுகள் அறிவிப்பு

## தமிழ் மொழிப் பிரிவில் ராம் தங்கம், உதயசங்கர் தேர்வு

நமது நிருபர்

புது தில்லி, ஜூன் 23: நிகழ் ஆண்டுக்கான (2023) யுவ புரஸ்கார், பால சாகித்திய புரஸ்கார் விருதுகளை சாகித்திய அகாதெமி வெள்ளிக்கிழமை அறிவித்தது. தமிழகத்தைச் சேர்ந்த எழுத்தாளர்கள் ராம் தங்கம், உதயசங்கர் ஆகியோரின் படைப்புகள் விருதுக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

இலக்கிய உலகில் உயரிய விருதாக கருதப்படும் சாகித்திய அகாதெமி விருது, இந்தியாவில் அங்கீகரிக்கப்பட்ட 24 மொழிகளில் வெளியாகும் சிறந்த இலக்கியப் படைப்புகளுக்கு ஆண்டுதோறும் அளிக்கப்பட்டு வருகிறது.

மேலும், இலக்கிய படைப்பாளிகளை கெளரவிக்கும்வகையில், ஆண்டுதோறும் இளம் எழுத்தாளர்களுக்கு 'யுவ புரஸ்கார்' விருதையும், சிறுவர் இலக்கியத்துக்கான 'பால சாகித்திய புரஸ்கார்' விருதையும் இந்திய பிராந்திய மொழிப் படைப்புகளுக்கு சாகித்திய அகாதெமி வழங்கி வருகிறது.

அதன்படி, நிகழாண்டுக்கான (2023) இரு விருதுகளும் வெள்ளிக்கிழமை அறிவிக்கப்பட்டன.



சாகித்திய அகாதெமியின் தலைவர் மாதவ் கௌசிக் தலைமையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தின் முடிவில், மேலும் 20 எழுத்தாளர்களுக்கு யுவ புரஸ்கார் விருதும், 22 எழுத்தாளர்களுக்கு பால சாகித்ய புரஸ்கார் விருதும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மொழிப் பிரிவில் 'திருக்கார்த்தியல்' எனும் சிறுகதைத் தொகுப்புக்காக தமிழகத்தைச் சேர்ந்த எழுத்தாளர் ராம் தங்கத்திற்கு யுவ புரஸ்கார் விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

குழந்தைகளுக்கான பால சாகித்திய புரஸ்கார் விருது பிரிவில், தமிழகத்தைச் சேர்ந்த எழுத்தாளர் உதயசங்கரின் 'ஆதனின் பொம்மை' எனும் நாவலுக்கு பால சாகித்திய புரஸ்கார் விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இரு விருதுகளும் தாமிரப் பட்டயம் மற்றும் ரூ.50 ஆயிரம் காசோலை ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

பால சாகித்திய புரஸ்கார் விருதும், யுவ புரஸ்கார் விருதும் பின்னர் நடைபெறும் சிறப்பு விழாவில் வழங்கப்படும் என்றும் சாகித்திய அகாதெமி தெரிவித்துள்ளது.

இது தவிர, அஸ்ஸாமி, வங்காளி, போடோ, ஹிந்தி, கன்னடம், கொங்கணி, மராத்தி, மலையாளம், நேபாளி, ஒடியா, தெலுங்கு, உருது உள்ளிட்ட பிராந்திய மொழி எழுத்தாளர்களுக்கும் இந்த விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

மைதிலி, மணிப்புரி, சம்ஸ்கிருதம் ஆகிய மொழிப் பிரிவுகளுக்கான யுவ புரஸ்கார் விருதுகள் பின்னர் அறிவிக்கப்பட உள்ளன.

பால சாகித்திய விருது இந்த ஆண்டு கஷ்மீரி மொழிப் பிரிவில் அளிக்கப்படவில்லை. மணிப்புரி பிரிவில் பின்னர் விருது அறிவிக்கப்படும் என சாகித்திய அகாதெமி தெரிவித்துள்ளது.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து

சென்னை, ஜூன் 23: புரஸ்கார் விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ள விருதாளர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.



இது குறித்து, ட்விட்டரில் வெள்ளிக்கிழமை அவர் வெளியிட்ட பதிவு:

நம் வரலாற்றின் வேர்களை இளையோர் அறிய, கீழடியைத் தன் கதைக் களமாய்க் கொண்டு 'ஆதனின் பொம்மை'யை உருவாக்கினார், எழுத்தாளர் உதயசங்கர். அவரது படைப்புக்கு அங்கீகாரமாக பாலசாகித்ய புரஸ்கார் விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று இளையமிஞ்சி எனும் வலியை நாஞ்சில் நாட்டு மொழியில் மிக அழுத்தமான விவரிப்புகளால் பதிவு செய்த 'திருக்கார்த்தியல்' சிறுகதைத் தொகுப்புக்காக, எழுத்தாளர் ராம் தங்கத்துக்கு யுவசாகித்ய புரஸ்கார் விருது அறிவிக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு எனது மனமார்ந்த பாராட்டுகள் என்று தனது பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

## கோவில்பட்டி மண்ணுக்கு சமர்ப்பணம்

கோவில்பட்டி, ஜூன் 23: சாகித்திய அகாதெமியின் பால புரஸ்கார் விருதை கோவில்பட்டி மண்ணுக்கு சமர்ப்பணம் செய்வதாக, எழுத்தாளர் கா.உதயசங்கர் தெரிவித்தார்.

தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியைச் சேர்ந்த கார்மேகம்-கமலம் தம்பதியின் மகன் எழுத்தாளர் கா. உதயசங்கர். இவருக்கு மல்லிகா என்ற மனைவியும், நவீனா, துர்கா என்ற இரு மகள்களும் உள்ளனர். இளங்கலை வேதியியல் பட்டம் பெற்ற உதயசங்கர் ரயில்வே துறையில் நிலைய அதிகாரியாகப் பணியாற்றி விருப்ப ஓய்வு பெற்றவர்.

தமிழ்நாடு சிறார் எழுத்தாளர் கலைஞர்கள் சங்க மாநிலத் தலைவராகவும், தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்க மாநில செயற்குழு உறுப்பினராகவும் இருந்து வருகிறார். சிறுகதை, கதை, கட்டுரை, குறுநாவல், மொழிபெயர்ப்பு உள்பட 150 நூல்கள் எழுதியுள்ளார்.

இவரது 'ஆதனின் பொம்மை' நாவலுக்கு, சாகித்திய அகாதெமியின் நிகழ் ஆண்டுக்கான பால புரஸ்கார் விருது அறிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து எழுத்தாளர் கா.உதயசங்கர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

### கா.உதயசங்கர்



சங்க கால பாடல்களில் சொல்லப்பட்ட கருத்துகள் அனைத்தும் உண்மை என்பதை கீழடி, சிவகளை, ஆதிச்சநல்லூர் அகழ்வாராய்ச்சிகள் நிரூபித்துள்ளன. ஆதனின் பொம்மை நாவலின் கதைக்களம் கீழடி தான்.

கீழடி அகழாய்வை முடக்குவதற்கு பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில், அவற்றை முறியடித்து தமிழர்களின் தொன்மை வெளிப்படுத்தப்பட்டுள்ளது. கீழடி அகழாய்வு வெளிப்படுத்திய வரலாற்றை இளம் தலைமுறையினரிடம் கொண்டு செல்ல வேண்டும் என்ற நோக்கில் உருவானது 'ஆதனின் பொம்மை' நாவல்.

சங்ககால பாடல்களில் ஆதன், ஆதிரன், இரவாதன், கோதை என்று பல பெயர்கள் இடம்பெற்றுள்ளன. இந்த பெயர்கள் இப்போது மக்களின் பழக்கத்திலிருந்து மறைந்துவிட்டன. தமிழில் மிகச்சிறந்த ஆழமான பொருள் கொண்ட பெயர்கள் இருப்பதை உணர்த்த வேண்டும் என்பதற்காக, ஆதன் என்ற பெயரை கதாபாத்திரத்திற்கு வைத்தேன். எனது 43 ஆண்டுகால எழுத்துப் பணியில், இப்போது அரசின் விருது கிடைத்துள்ளது மகிழ்ச்சி அளிக்கிறது. இந்த விருதை கோவில்பட்டி மண்ணுக்கு சமர்ப்பிக்கிறேன்.

கோவில்பட்டி சுற்றுவட்டாரப் பகுதிகளில் எழுத்தாளர்கள் அழகிரிசாமி, கி.ரா. காலம் தொடங்கி புதிய எழுத்தாளர்கள் உருவாகிக் கொண்டே உள்ளனர். புதிய எழுத்தாளர்களை உருவாக்கும் கோவில்பட்டியில் கரிசல் வட்டார இலக்கிய ஆய்வு மையம் தொடங்க வேண்டும். இந்த ஆய்வு மையத்தின் வழியாக புதிய படைப்பாளர்களை உருவாக்குவதற்கான பயிலரங்குகள், ஆய்வாளர்களை உருவாக்கும் நிகழ்வுகளை முன்னெடுக்க வேண்டும் என்றார்.

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
[https://www.evastaliniasacademy.in/](https://www.evastaliniasacademy.in/)
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# மனிதகுலத்தின் எதிரி பயங்கரவாதம்

**வாஷிங்டன், ஜூன் 23:** மனிதகுலத்தின் மிகப் பெரும் எதிரி பயங்கரவாதம் என்று பிரதமர் நரேந்திர மோடி கூறினார்.

பயங்கரவாதத்தை எதிர்கொள்வதில் எந்தவிதத் தயவும் கூடாது என்றும் அவர் தெரிவித்தார்.

அமெரிக்காவில் அரசுமுறைப் பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் மோடி, அந்த நாட்டு நாடாளுமன்றத்தின் கூட்டுக் கூட்டத்தில் வியாழக்கிழமை (இந்திய நேரப்படி வெள்ளிக்கிழமை அதிகாலை 1.30 மணி) உரையாற்றினார். அவர் ஒரு மணிநேரம் ஆங்கிலத்தில் நிகழ்த்திய உரை:-

**பெருமைப்படுகிறேன்:** சுமார் 140 கோடி இந்தியர்களின் சார்பில் அமெரிக்க நாடாளுமன்றத்தில் உரையாற்றுவது பெருமையாக உள்ளது. அதிலும் 2-ஆவது முறையாக உரையாற்றுவது பெரும் பாக்கியமாக உள்ளது. நாம் வாழ்ந்துவரும் சகாப்தம் பல்வேறு பிரச்னைகளைச் சந்தித்து வரும் நிலையில், இந்த நூற்றாண்டுக்கான தேவை குறித்து உரையாற்றவுள்ளேன்.

**பாதுகாப்பு கூட்டாளியாக...:** இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையேயான நல்லுறவு பெரும் மாற்றம் கண்டுள்ளது. நடப்பு நூற்றாண்டின் தொடக்கத்தில் பாதுகாப்புத் துறை விவகாரங்களில் இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே எந்தவிதத் தொடர்பும் காணப்படவில்லை. ஆனால், தற்போது இந்தியாவின் மிக முக்கியமான பாதுகாப்புக் கூட்டாளியாக அமெரிக்கா மாறியுள்ளது.

**ஜனநாயகத்தின் தாய் இந்தியா:** இரு நாடுகளுக்கு இடையேயான முக்கியப் பகிர்வாக ஜனநாயகம் திகழ்கிறது. அதுவே சமத்துவம், நற்பெயர் ஆகியவற்றுக்கு அடிப்படையாக உள்ளது. ஜனநாயகமே விவாதத்துக்கு வழிகோலுகிறது. சுதந்திரமான கருத்துகளுக்கும் ஜனநாயகமே சிறகுகளை வழங்குகிறது. பழங்காலத்தில் இருந்தே ஜனநாயகக் கொள்கைகளுக்கு இந்தியா மதிப்பளித்து வருகிறது. ஜனநாயகத்தின் தாயாகவும் இந்தியா திகழ்கிறது.

**பெரும் அபாயம்:** அமெரிக்க இரட்டைக் கோபுர பயங்கரவாதத் தாக்குதல் நடத்தப்பட்டு 20 ஆண்டுகளும், மும்பையில் பயங்கரவாதத் தாக்குதல் நிகழ்த்தப்பட்டு 10 ஆண்டுகளும் கடந்துவிட்டன. பயங்கரவாதமும் தீவிரவாதமும் உலகின் பெரும் அபாயமாக மாறியுள்ளன. அந்தக் கொள்கைகள் புதிய வடிவங்களாகத் தொடர்ந்து மாறி வருகின்றன. ஆனால், அவற்றின் நோக்கம் ஒன்றாகவே உள்ளது.

**எந்தவிதத் தயவும் கூடாது:** மனிதகுலத்தின் மிகப் பெரும் எதிரியாக பயங்கரவாதம் உள்ளது. அதை எதிர்கொள்வதில் எந்தவிதத் தயவும் பார்க்கக் கூடாது. பயங்கரவாதத்துக்குத் தொடர்ந்து ஆதரவு அளித்து, அதைத் தூண்டி வருவோருக்கு எதிரான நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்த வேண்டும்.

**சூழும் கருமேகங்கள்:** சர்வதேச அமைதியானது ஐ.நா. விதிகளைக் கடைப்பிடித்தல், பிரச்னைகளுக்கு அமைதி வழியில் தீர்வு காணுதல், மற்ற நாடுகளின் இறையாண்மை, பிராந்திய ஒருமைப்பாட்டுக்கு மதிப்பளித்தல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது. இந்தோ-பசிபிக் பிராந்தியத்தை அதிக்க குணமும், மோதல்போக்கும் நிறைந்த கருமேகங்கள் சூழ்ந்து வருகின்றன. இந்தப் பிராந்தியத்தின் நிலைத்தன்மையை உறுதி செய்யும் கூட்டமைப்பாக 'க்வாட்' உருவெடுத்துள்ளது.

**போருக்கான காலமல்ல:** உக்ரைன் மோதலானது பிராந்தியத்தில் பல்வேறு எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தி வருகின்றன. முக்கியமாக, தெற்குலக நாடுகள் அதிக பாதிப்புகளை எதிர்கொண்டு வருகின்றன. நான் ஏற்கெனவே நேரடியாகவும் வெளிப்படையாகவும் தெரிவித்தபடி, இது போருக்கான காலம் அல்ல; பேச்சுவார்த்தைக்கும் தூதரக உறவுகளுக்குமானது. உக்ரைன் போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் ஒருங்கிணைந்து மேற்கொள்ள வேண்டும்.

**பல்துறை வித்தகர்கள்:** இந்தியாவை பூர்விகமாக கொண்ட லட்சக்கணக்கானோர் அமெரிக்காவில் வசித்து வருகின்றனர். சிலர் எம்.பி.க்களாக நாடாளுமன்றத்தில் அமர்ந்துள்ளனர். ஒருவர் (துணை அதிபர் கமலா ஹாரிஸ்) வரலாறு படைத்து இங்கு அமர்ந்திருக்கிறார். ஆங்கிலச் சொற்களை சரியாக உச்சரிக்கும் 'ஸ்பெல்லிங் பீ' போட்டியில் மட்டுமல்லாமல் பல்வேறு துறைகளிலும் இந்திய-அமெரிக்கர்கள் சிறப்பு பெற்றுத் திகழ்கின்றனர் என்றார் பிரதமர் மோடி.

## அமெரிக்க நாடாளுமன்றத்தில் பிரதமர் மோடி உரை



அமெரிக்க நாடாளுமன்ற கூட்டுக் கூட்டத்தில் உரையாற்றிய பிரதமர் நரேந்திர மோடி.

## பாராட்டு மழையில் நனைந்த பிரதமர் மோடி!

உரையாற்றுவதற்காக அமெரிக்க நாடாளுமன்றத்துக்குள் பிரதமர் மோடி நுழைந்தபோது, மாடத்தில் கூடியிருந்த இந்திய-அமெரிக்க சமூகத்தினர், 'மோடி, மோடி' என முழக்கமிட்டனர். பிரதமர் மோடியின் உரையை அமெரிக்க எம்.பி.க்களும், இந்திய-அமெரிக்கர்களும் மிகுந்த ஆர்வத்துடன் கேட்டனர்.

பிரதமர் மோடி உரையாற்றுகையில், அவர் தெரிவித்த கருத்துகளுக்காக 15 முறை அமெரிக்க எம்.பி.க்கள் எழுந்து நின்று கைதட்டி பாராட்டு தெரிவித்தனர். அவர் உரையாற்றி முடித்ததும் நீண்ட நேரத்துக்கு அமெரிக்க எம்.பி.க்கள் எழுந்து நின்று பாராட்டினர்.

பின்னர், பிரதமர் மோடியைச் சூழ்ந்துகொண்டு அமெரிக்க எம்.பி.க்கள் அவருடன் கைகுலுக்கினர். மேலும், மோடியிடம் கையொப்பத்தையும் (ஆட்டோகிராஃப்) அவர்கள் பெற்றனர்.

## 2-ஆவது முறையாக உரை

அமெரிக்க நாடாளுமன்றத்தின் கூட்டுக் கூட்டத்தில் 2-ஆவது முறையாக உரையாற்றிய முதல் இந்தியர் என்ற சிறப்பை பிரதமர் மோடி பெற்றார். அத்தகைய சாதனையை வரலாற்றில் ஒருசில வெளிநாட்டுத் தலைவர்களே படைத்துள்ளனர்.

பிரிட்டன் முன்னாள் பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சில் 1941, 1943, 1952 ஆகிய ஆண்டுகளில் 3 முறை அமெரிக்க நாடாளுமன்றத்தின் கூட்டுக் கூட்டத்தில் உரையாற்றியுள்ளார். தென்னாப்பிரிக்க முன்னாள் அதிபர் நெல்சன் மண்டேலா 1990, 1994 ஆகிய ஆண்டுகளில் உரையாற்றியுள்ளார்.

இஸ்ரேல் முன்னாள் பிரதமர் யித்ஜாக் ராபின் 1976, 1994 ஆகிய ஆண்டுகளில் அமெரிக்க நாடாளுமன்றத்தில் உரையாற்றியுள்ளார். இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு 1996, 2011, 2015 ஆகிய ஆண்டுகளில் உரையாற்றியுள்ளார். ஆனால், 2015-ஆம் ஆண்டு அவர் உரையாற்றியபோது வெள்ளை மாளிகையின் ஒப்புதல் பெறப்படவில்லை என சர்ச்சை எழுந்தது.

உக்ரைன் அதிபர் வொலோதிமீர் ஸெலென்ஸ்கி அதிகாரபூர்வமாக ஒரு முறையும், அதிகாரபூர்வமற்ற வகையில் ஒரு முறையும் அமெரிக்க நாடாளுமன்றத்தில் உரையாற்றியுள்ளார்.

EVA STALIN IAS

# அம்பேத்கர் பல்கலை.க்கு விருது

**சென்னை,ஜூன் 23:** தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்துக்கு சிறந்த மாநில பல்கலைக்கழக விருதை பால்வளத்துறை அமைச்சர் டி.மனோ தங்கராஜ் வழங்கினார்.

சென்னை கிண்டியில், தொழில் மற்றும் வர்த்தக சங்கக் கூட்டமைப்பு தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் உடன் இணைந்து தமிழ்நாடு உயர்கல்வி உச்சி மாநாடு மற்றும் விருதுகள் வழங்கும் விழா அண்மையில் நடைபெற்றது.

இதில் தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் சிறந்த மாநில பல்கலைக்கழகமாக தேர்ந்தெடுக்கப்பட்டது.

அந்த விருதை பால்வளத்துறை அமைச்சர் டி. மனோ தங்கராஜ் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் கர்னல் நா.சு.சந்தோஷ் குமாருக்கு வழங்கினார்.

EVA STALIN IAS ACADEMY

# பெண் குழந்தைகளைப் பாதுகாக்க ‘இமைகள்’ திட்டம் தொடக்கம்



சென்னையில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற பெண் குழந்தைகளைப் பாதுகாக்கும் இமைகள் திட்ட தொடக்க விழாவில், வழிகாட்டு நெறிமுறைகளை டிஜிபி சைலேந்திரபாபு வெளியிட, அதைப் பெற்றுக் கொண்ட வடக்கு மண்டல ஐஜி கண்ணன்.

**சென்னை, ஜூன் 23:** தமிழக காவல் துறையின் வடக்கு மண்டலம் சார்பில் பெண் குழந்தைகளை பாதுகாக்கும் வகையில் ‘இமைகள்’ திட்டம் வெள்ளிக்கிழமை தொடங்கி வைக்கப்பட்டது.

இதன் தொடக்க விழா சென்னை காமராஜர் சாலையில் உள்ள டிஜிபி அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு வடக்கு மண்டல ஐஜி கண்ணன் தலைமை வகித்தார். டிஐஜி-க்கள் முத்துசாமி, பகலவன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிறப்பு விருந்தினராக பங்கேற்ற தமிழக காவல் துறையின் தலைமை இயக்குநர் சி.சைலேந்திரபாபு, ‘இமைகள்’ திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

இந்தத் திட்டத்துக்காக, பாலியல் குற்றங்களில் இருந்து பெண் குழந்தைகளை பாதுகாக்கும் வகையில் பிற துறையுடன் இணைந்து செயல்பட நிலையான வழிகாட்டு நெறிமுறை உருவாக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின்படி, பெண் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்களை முறையாக வழக்குப் பதிவு செய்து, 60 நாள்களில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்வது, பெண் குழந்தைகளின் சட்டப்படியான பாதுகாப்பை உறுதி செய்வது உள்ளிட்டவற்றில் அதிக கவனம் செலுத்த காவல்துறை முடிவு செய்துள்ளது.

மேலும், பெண் குழந்தைகள் பாதுகாப்பு குறித்து பள்ளி-கல்லூரி மாணவர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியில் வடக்கு மண்டலத்தைச் சேர்ந்த சரக டிஐஜி-க்கள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

# முதல் இந்திய தயாரிப்பு செமிகண்டக்டர் சிப்: 2024-இல் பயன்பாட்டுக்கு வரும்

புது தில்லி, ஜூன் 23: 'முதல் இந்திய தயாரிப்பு செமிகண்டக்டர் (குறைமின் கடத்தி) சிப் 2024-ஆம் ஆண்டு டிசம்பருக்குள் பயன்பாட்டுக்கு வர வாய்ப்புள்ளது' என்று மத்திய தகவல்தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் கூறினார்.

மேலும், 'ஓராண்டுக்குள் நாட்டில் 4 முதல் 5 செமிகண்டக்டர் ஆலைகள் நிறுவப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது' என்றும் அவர் கூறினார்.

பிரதமர் நரேந்திர மோடி அமெரிக்காவுக்கு அரசுமுறை பயணம் சென்ற நிலையில், இரு நாடுகளிடையே பல்வேறு ஒப்பந்தங்கள் கையொப்பமாகின. அமெரிக்க அதிபர் ஜோ பைடனுடனான ஆலோசனைக்குப் பிறகு, இரு தலைவர்களும் கூட்டாக அறிக்கை வெளியிட்டனர்.

இதுதொடர்பாக தில்லியில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில், மத்திய அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் கூறியதாவது:

அமெரிக்காவைச் சேர்ந்த கணினி சேமிப்பக சிப் தயாரிப்பு நிறுவனமான 'மைக்ரான்', ரூ.22,540 கோடி முதலீட்டில் குஜராத் மாநிலத்தில் செமிகண்டக்டர் பாகங்கள் இணைப்பு மற்றும் பரிசோதனை ஆலையை அமைக்கவுள்ளது. ஆலையை அமைப்பதற்கான செலவில் ரூ.6,763 கோடியை மைக்ரான் நிறுவனமும், எஞ்சிய செலவை மாநில அரசும் ஏற்கவுள்ளன. ஆலை கட்டுமானப் பணிகள் நிகழாண்டிலேயே தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த ஆலைக்கான நில ஒதுக்கீடு, வடிவமைப்புப் பணிகள் வரிவிதிப்பு தொடர்பான ஒப்பந்தங்கள் உள்ளிட்ட பணிகள் நிறைவடைந்துள்ளன. மைக்ரான் ஆலையிலிருந்து முதல் இந்திய தயாரிப்பு செமிகண்டக்டர் சிப் 2024-ஆம் ஆண்டு டிசம்பரில் பயன்பாட்டு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது என்றார்.

'குஜராத் செமிகண்டக்டர் ஆலை மூலமாக 5,000 பேருக்கு நேரடி வேலைவாய்ப்பும், 15,000 பேருக்கு பல ஆண்டுகளுக்கு சமூகப் பணி வாய்ப்புகளும் கிடைக்கும்' என்று மைக்ரான் நிறுவனம் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

செமிகண்டக்டர்களுக்கு சீனா, தைவான், வியத்நாம், கொரிய நாடுகளையே இந்தியா நம்பியிருந்த நிலையில், உள்நாட்டிலேயே செமிகண்டக்டர் தயாரிப்பு கட்டமைப்புகளை உருவாக்கும் முயற்சியை மத்திய அரசு தீவிரப்படுத்தியுள்ளது.


புது தில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய மத்திய தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ்.

# 'மாயமான உடனேயே டைட்டன் நீர்மூழ்கி வெடித்துச் சிதறியது'

**அமெரிக்க கடற்படை அதிகாரி**

பாஸ்டன், ஜூன் 23: புகழ்பெற்ற டைட்டானிக் கப்பலைப் பார்வையிடுவதற்காக 5 பேருடன் ஆழ்கடலுக்குள் சென்ற டைட்டன் நீர்மூழ்கிக் கப்பல், அது மாயமான சிறிது நேரத்திலேயே வெடித்துச் சிதறியதாக அமெரிக்க கடற்படை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து சிபிஎஸ் தொலைக்காட்சியிடம் அவர் கூறியதாவது:

டைட்டன் நீர்மூழ்கி ஆழ்கடலுக்குள் இறங்கிய ஞாயிற்றுக்கிழமை, கடலுக்குள் வினோதமான சப்தம் எழும்பியதை எங்களது ஒலி உணர்வு கருவிகள் மூலம் கண்டறிந்தோம்.

அந்த சப்தத்தின் தன்மையும், அது எழுந்த நேரமும் டைட்டன் நீர்மூழ்கி மாயமான சிறிது நேரத்திலேயே அது வெடித்துச் சிதறியதை உணர்த்துகிறது.

அந்த ஒலி குறித்து நாங்கள் அளித்த தகவலின் அடிப்படையிலேயே, கடலோரக் காவல்படைத் தனது தேடுதல் பகுதியை தேர்தெடுத்தது என்றார் அவர்.

பிரிட்டனிலிருந்து அமெரிக்கா நோக்கி கடந்த 1912-ஆம் ஆண்டு சென்று கொண்டிருந்த டைட்டானிக் கப்பல், வழியில் பனிப்பாறை மோதி கடலுக்குள் மூழ்கியதில் 1,500-க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர். கடலுக்குள் மூழ்கிய அந்தக் கப்பல், அமெரிக்காவின் நியூஃபௌண்ட்லாண்ட் தீவுக்கு 740 கி.மீ. தொலைவில் கடலடியில் உடைந்து கிடந்தது கடந்த 1985-ஆம் ஆண்டில் கண்டறியப்பட்டது.

அதன் பிறகு, அந்தக் கப்பலை கடல் ஆய்வாளர்கள், விஞ்ஞானிகள், திரைப்படத் துறையினர் போன்றவர்கள் ஆழ்கடலுக்குள் சென்று பார்வையிட்டு வந்தனர்.

இந்த நிலையில், டைட்டானிக் கப்பலை பார்வையிடுவதற்கு சுற்றுலா பயணிகளை அழைத்துச் செல்வதற்காக ஓஷன்கேட் எக்ஸ்பெடிஷன்ஸ் என்ற அமெரிக்க தனியார் நிறுவனம் நீர்மூழ்கி ஒன்றை வடிவமைத்தது.

'டைட்டன் நீர்மூழ்கி' என்று பெயரிடப்பட்ட அதில் அதிகபட்சமாக 5 பேர் வரை பயணிக்க முடியும். எனினும், அந்த நீர்மூழ்கியின் பாதுகாப்புத் தன்மை குறித்து நிபுணர்கள் சந்தேகம் எழுப்பி வந்தனர்.

இந்த நிலையில், எம்வி போலார் பிரின்ஸ் என்ற கப்பல் மூலம் டைட்டன் நீர்மூழ்கி டைட்டானிக் கப்பல் விழுந்துள்ள கடல் பகுதிக்குள் கடந்த ஞாயிற்றுக்கிழமை இறக்கப்பட்டது.


அதில் பிரிட்டன் தொழிலதிபர் ஹமீஷ் ஹார்டிங், ஓஷன்கேட் நிறுவனத்தின் நிறுவனர் ஸ்டாக்டன் ரஷ், நீர்மூழ்கி மாலுமியும் பிரான்ஸ் கடற்படையின் முன்னாள் கமாண்டோவுமான பால்-ஹென்றி நார்கியோலே, பாகிஸ்தான் தொழிலதிபர் ஷேஸாதா தாவூத், அவரது மகன் சுலைமான் தாவூத் ஆகிய 5 பேர் இருந்தனர்.

அந்த நீர்மூழ்கி கடலுக்குள் இறங்கிய 1 மணி நேரம் 45 நிமிஷத்துக்குப் பிறகு அதற்கும் போலார் பிரின்ஸ் கப்பலுக்கும் இடையே இருந்த தகவல் தொடர்பு துண்டிக்கப்பட்டது.

அதையடுத்து, 4 நாள்களாக நடைபெற்ற தேடுதல் பணிகளுக்குப் பிறகு அந்த நீர்மூழ்கி கடலுக்குள் வெடித்துச் சிதறி, டைட்டானிக் கப்பல் உடைந்து கிடக்கும் பகுதிக்கு சுமார் 1600 அடி தொலைவிலுள்ள கடல் படுகையில் சிதறிக் கிடப்பதை ரிமோட் நீர்மூழ்கி சாதனம் (ஆர்ஓவி) மூலம் மீட்புக் குழு வியாழக்கிழமை கண்டறிந்தது.

அதையடுத்து, டைட்டன் நீர்மூழ்கியிலிருந்த ஐந்து பேரும் உயிரிழந்தது உறுதியானது.

இந்த நிலையில், கடலுக்குள் மாயமான சிறிது நேரத்திலேயே அந்த நீர்மூழ்கி வெடித்துச் சிதறிய சப்தத்தை தங்களது ஒலி உணர்வு கருவிகள் பதிவு செய்ததாக அமெரிக்க கடற்படை அதிகாரி தற்போது தெரிவித்துள்ளார்.


கடலுக்குள் இறங்கும் டைட்டன் நீர்மூழ்கி (கோப்புப் படம்).